செய்தி வெளியீடு எண்:335 நாள் : 11.07.2016

தமிழ்நாடு அரசு
செய்தி மக்கள் தொடர்புத் துறை,
எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம்
(தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலை பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது)
சென்னை–600 113

செய்திக் குறிப்பு

திரைப்படத் துறை மற்றும் தொலைக்காட்சித் துறையில் மிகச் சிறந்த தொழில்நுட்ப வல்லுநர்களையும், இயக்குநர்களையும் உருவாக்கி வரும் எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக, சென்னை தரமணியில் தமிழக அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கீழ் செவ்வனே இயங்கி வருகின்றது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, 14.09.2015 அன்று மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத்திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்களால் சட்டசபையில் எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் தற்போது கற்பிக்கப்பட்டு வரும் திரைத் தொழில்நுட்பங்களுக்கான பட்டயப் படிப்புகள் இனி, பட்டப்படிப்புகளாக மேம்படுத்தப்படும் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதனைத்தொடர்ந்து, எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம், தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலை பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்று 2016–2017 கல்வியாண்டு முதல் **நான்காண்டு கால இளங்கலை – காட்சிக்கலை (Bachelor of Visual Arts)** என்னும் பட்டப் படிப்புகளை கீழ்க்கண்ட பிரிவுகளில் பயிற்றுவிக்கவுள்ளது. 2016–2017ஆம் கல்வியாண்டின் மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1) இளங்கலை – காட்சிக்கலை ( ஒளிப்பதிவு) [Bachelor of Visual Arts (Cinematography)]
2) இளங்கலை – காட்சிக்கலை (எண்மிய இடைநிலை) [Bachelor of Visual Arts (Digital Intermediate)]
3) இளங்கலை – காட்சிக்கலை (ஒலிப்பதிவு) [Bachelor of Visual Arts (Audiography)]
4) இளங்கலை – காட்சிக்கலை (இயக்குதல் மற்றும் திரைக்கதை எழுதுதல்) [Bachelor of Visual Arts (Direction &Screenplay writing)]
5) இளங்கலை – காட்சிக்கலை (படத்தொகுப்பு) [Bachelor of Visual Arts (Film Editing)]
6) இளங்கலை – காட்சிக்கலை ( உயிர்ப்பூட்டல் மற்றும் காட்சிப்பயன் ) [Bachelor of Visual Arts (Animation and Visual Effects)]

மேற்குறிப்பிட்ட பாடப் பிரிவுகளில் சேர்ந்து, கலைத்துறையில் தங்களின் கலை ஆர்வத்தை வளர்த்துக் கொள்ள விரும்பும் மாணவ/மாணவியர், இதற்கான விண்ணப்பப் படிவங்களை தமிழக அரசின் “www.tn.gov.in" என்ற இணையதள முகவரியில் 12.07.2016–இல் இருந்து பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம் என்று முதல்வர், எம்.ஜி.ஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம், சென்னை–600 113 அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9